பள்ளமோர்க்குளக் கோயில்களும் வழிபாட்டு முறைகளும் History of Palla Morkkulam Temples and Rituals

முனைவர் **சத்தியராஜ் தங்கச்சாமி | Dr. Sathiyaraj Thangasamy**

தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர் - 641 042. 9600370671, sathiyarajt@skacas.ac.in

ஆய்வுச்சுருக்கம்

இந்தியாவின் தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டம் உள்ளது. இம்மாவட்டத்திற்கு உட்பட்டுத் தில்லையேந்தல் எனும் ஊராட்சி உள்ளது. இவ்வூராட்சிக்கு உட்பட்ட ஊர் பள்ளமோர்க்குளம். இவ்வூரில் வையக்கிழவன் உட்படப் பல கோயில்கள் உள்ளன. இக்கோயில்கள் குறித்த அறிமுகத்தையும், வழிபாட்டு முறைகளையும் அறிமுகம் செய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

Abstract

Ramanathapuram district is located in Tamil Nadu, India. Thillayendal is a panchayat under this district. Palla Morkkulam is a town under this municipality. There are many temples in this town including Vaiyakizhavan. The purpose of this study is to give an introduction to these temples and their rituals.

திறவுச் சொற்கள் :

இந்தியா, தமிழ்நாடு, இராமநாதபுரம், மாவட்டம், தில்லையேந்தல், ஊராட்சி, ஊர், பள்ளமோர்க்குளம், Palla Morkkulam, Thiruppullani, Thillaiyendal, Ramanathapuram, Tamilnadu, India

முன்னுரை

பள்ளமோர்க்குளம் எனும் ஊரின் பெயர் தற்பொழுது வழங்கப்பெறும் பெயராகும். இதற்கு முன்பு பல்வேறு இடப்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. அதற்கு முன்பு வழங்கிய பெயர் வேறு வேறாக இருந்திருத்தல் வேண்டும் என்பதால் இப்பொழுது வழங்கப்பெறும் பெயர் எனக் குறிக்கப்படுகின்றது. இங்கு வழிபட்டு வரும் வையக்கிழவன் முதலிய கோயில்கள் பற்றி அறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

ஊர் வரலாறு


கோயில் பற்றி அறிவதற்கு முன்பு, கோயில் இருக்கும் ஊர் வரலாற்றையும் அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் முறையையும் அறிதல் வேண்டும். அப்போதுதான் கோயில் வழிபாட்டு முறைக்கும் ஊர் மக்களின் வாழ்வியலுக்கும் உள்ள தொடர்பை உணர முடியும்.

பள்ளமோர்க்குளம் எனும் பெயரில் வழங்கும் இவ்வூரில் பள்ளர் இனத்தைச் சேர்ந்த சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இச்சமூகத்தினர் மல்லாக்கட்டி, உருமிக் கோடாங்கி, தச்சன், காலாடி, கூவன், பட்டாணி போன்ற வகையறாக்கள் உடையவர்களாக உள்ளனர். இப்பிரிவு அச்சமூகத்தினரின் கிளைப்பிரிவாகும்.

இவர்களின் முதன்மைத்தொழில் வேளாண்மை. ஆனால் தற்போது பல்வேறு தொழில்களைச் செய்து வருகின்றனர். கட்டடப் பொறியாளர், ஆசிரியர், வங்கி ஊழியர், அயல்நாட்டுப் பணியாளர், கட்டடப் பணியாளர், கூலித் தொழிலாளர் எனப் பல்வேறு தொழில்களைச் செய்யும் மக்களாக வாழ்ந்து வருகின்றனர்.


ஊர் அமைவிடம்

இவ்வூர் இராமநாதபுரத்திலிருந்து கீழக்கரைக்குச் செல்லும் வழியில் 17.5 கி.மீ. தொலைவில் தோணிப்பாலத்தின் மேற்கே அமைந்துள்ளது. இந்தத் தோணிப்பாலத்தின் வழியாகத்தான் ஓடைநீர் சேதுக்கரை கடலில் கலக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.





(படம் - 1, இராமநாதபுரத்திலிருந்து - பள்ளமோர்க்குளம் செல்லும் வழித்தடம் - கூகுள் படம்)

இவ்வூரின் வழியை இவ்வாறும் அறிந்து கொள்ளலாம். திருப்புல்லாணியிலிருந்து மேற்கில் உத்திரகோசமங்கை நோக்கிச் செல்லும் பொழுது 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. அதனைக்காட்டும் கூகுள் படம் வருமாறு:



(படம் - 2, திருப்புல்லாணியிலிருந்து - பள்ளமோர்க்குளம் செல்லும் வழித்தடக் கூகுள் படம்)





(படம் - 3, 4 பள்ளமோக்குளம் ஊரின் எல்லைகளின் கூகுள் வரைபடம்)

பள்ளமோர்க்குளம் எனும் ஊருக்குச் செல்வதற்குத் தற்பொழுது பேருந்து வசதி உள்ளது. இராமநாதபுரத்திலிருந்து குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் ஒரு பேருந்து (1A) இயக்கப்படுகிறது.

பள்ளமோர்க்குளம் - பள்ளியர் திடல்; இடப்பெயர் ஆய்வு

பள்ளமோர்க்குளம் எனும் ஊரின் பெயர் நூறு ஆண்டுகளுக்கு முன்பு பள்ளியர் திடல் என்பதாக இருந்திருத்தல் வேண்டும் என அவ்வூரில் வாழும் மூத்த குடிமக்கள் கருதி வருகின்றனர் (சோனைமுத்து, க.பஞ்சவர்ணம், க.தங்கச்சாமி, க.இராமையா, க.பழனிச்சாமி, த.வசந்தா, க.வையமுத்து, கருப்பையா). ஊரிலிருந்து கிழக்குத் திசையில் கருவேலம் காட்டிற்குள் அம்மன் கோயில் ஒன்று உள்ளது. அதன் வடக்குத் திசையில் குத்துக்கல் முனீசுவரன் கோயில் ஒன்றும் உள்ளது. இக்கோயில் பிடிமண் எடுத்துக் கொண்டு வந்து அண்மைக்காலத்தில் உருவாக்கிய கோயில் என்ற தகவலையும் தருகின்றனர் (சோனைமுத்து, க.பஞ்சவர்ணம்).



(படம் - 5, குத்துக்கல் முனி கோயிலுக்கு அருகில் ஓடை மராமத்துப் பணியின் நடுகல்)

இங்குத்தான் நூறு ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அதன் அடையாளமாக அங்குப் பானை ஓடுகள் கிடைப்பதைப் பார்க்கலாம்.



(படம் - 6, குத்துக்கல் முனி கோயிலுக்கு அருகில் சிதறிக் கிடக்கும் பானை ஓடுகள்)

இந்த மேட்டிற்கு அருகில் ஓர் ஓடை ஒன்று செல்கிறது. இவ்வோடைக்குச் சின்ன ஓடை என்று பெயர் (த.வசந்தா). இந்த ஓடை தோணிப்பாலத்தின் வழியாகச் சேதுக்கரை கடலுக்குச் செல்லும் நீர் வழித்தடத்தில் சென்று கலக்கிறது.

அந்தப் பள்ளியர்திடலின் ஓடைக்கு வடக்கே ஒரு மேட்டுப் பகுதியிலும் சிலர் வாழ்ந்து வந்துள்ளனர். நூறாண்டுகளுக்கு முன்பு அந்த ஓடையில் பெருவெள்ளம் ஒன்று வந்துள்ளது. அது கடல்கோள் (சுனாமி) என்றும் கூறுகின்றனர். அதனால் இரண்டு மேட்டிலும் வாழ்ந்து வந்த மக்கள் இரு வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர் (தகவலாளர்-க.சோனைமுத்து). அதுவே பின்பு இரு வேறு மோர்க்குளம் என வழங்கப்பட்டுள்ளது. நாட்டார் தெய்வங்களை வழிபடுவோரின் ஊரின் பெயராகப் பள்ளமோர்க்குளம் எனவும் இசுலாமிய வழிபாட்டு முறைக்கு மாறியவர்கள் வாழும் ஊர் முஸ்லீம் மோர்க்குளம் எனவும் வழங்கப்பட்டன.

வைகை ஆற்றின் கிளைப்பிரிவு ஒன்று பெரிய கண்மாய் நீர்ப்படுகையோடு சேரும். பெரிய கண்மாய் நீர்ப்படுகையிலிருந்து வெளியேறும் நீர் களரிக் கண்மாய்க்கு வரும். அந்த நீர் பள்ளமோர்க்குளத்திற்கு வந்து சேரும். அக்கண்மாயின் படம் வருமாறு.





(படம் - 7, 8 கண்மாய்)

பின்பு ஓடை வழியாகச் சேதுக்கரை கடலைச் சேரும்.



(படம் - 9, நிலப்பகுதியும் கடல் பகுதியும்)

இந்தப் பள்ளமோர்க்குளம் கண்மாயின் கிழக்குப் பகுதியில் நீண்ட கரைப்பகுதி உள்ளது. அதன் மேற்குப் பகுதி வயலால் சூழப்பட்ட வேளாண்மைப் பகுதியாகும். அதன் கிழக்குப்பக்க மேட்டுப் பகுதியில் குறிப்பாக உசிலை முனிக்கும் இத்தி முனிக்கும் இடையில் மடைப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். அதற்குரிய எச்சங்கள் அங்குக் காணப்படுகின்றன. சான்று தேவை.



(படம் - 10, பழைய வீடு எனும் பகுதி)



(படம் - 11, நான்காவது மடை)





(படம் - 12, 13 உசிலை முனிக்கோயில்)

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு குளக்கரை உடைந்து நீர் ஊருக்குள் வந்துள்ளது. அப்பொழுது காமராசர் ஆட்சி புரிந்தார். அந்தக் குளக்கரையின் வடக்குப் பகுதியும் மேடாக இருந்ததால், அரசு சார்பில் அங்குக் குடியிருப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது. அங்கே தான் மக்கள் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

வழிபாட்டுத் தெய்வங்கள்

இங்கு வாழும் மக்களின் வழிபடு தெய்வங்களாக மாரியம்மன், கருப்பணசாமி, குத்துக்கல் முனி, இத்தி முனி, உசிலை முனி, கூரி சாத்தாயி, வையக்கிழவன் ஆகிய தெய்வங்கள் இருக்கின்றன. இத்தெய்வங்களுக்கான வழிபாட்டு முறைகளும் ஏறக்குறைய ஒன்றாகவே இருக்கின்றன. வையக்கிழவன் வழிபாட்டு முறை மட்டும் சற்று மாறுபட்டு உள்ளது எனலாம். அதாவது பிற தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் அசைவம் சார்ந்ததாகவும் வையக்கிழவன் வழிபாட்டுமுறை சைவம் சார்ந்ததாகவும் இருப்பதை அறிய முடிகின்றது. இந்த மாற்றம் எப்பொழுது இருந்து வந்தது என்பதை அறிதல் வேண்டும். இம்மக்களின் பெயர்கள்கூட இத்தெய்வங்களின் பெயர்களோடு தொடர்புடையதாக இருந்து வருகின்றது. சில

பெயர்கள் வருமாறு;- வையமுத்து, வைக்குமார், வைதீவான் சோழன், வையி, வைத்தியநாதன், வையமாணிக்கம், கருப்பையா, கருப்புச்சாமி, கருத்தக்கண்ணு, கருத்தமுளி, கருப்பாயி. ஆனால் அவையும் தற்பொழுது வழக்கிழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வையக்கிழவன் கோயில் தோற்றம்

பள்ளமோர்க்குளத்தில் இருக்கும் அனைத்துத் தெய்வங்களும் நீர்நிலையை ஒட்டியே அமைந்துள்ளன. அவ்வூரின் மேற்குப் பகுதியில் நீர்நிலை ஒன்று உள்ளது. அதற்கு ஊருணி என்று பெயர். இந்த நீரைத்தான் குடிப்பதற்குப் பயன்படுத்தினர். தற்பொழுது பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டு வருகிறது. அந்த ஊருணியின் மேற்குக் கரையில் வையக்கிழவன் கோயில் உள்ளது.





(படம் - 14, 15 வையக்கிழவன் கோயில்)

இக்கோயில் தொடக்க காலத்தில் எந்தவொரு கட்டுமானமும் இன்றி ஓர் ஓட்டினாலான கட்டடமும் ஒரு விமானத்தோடு அமைந்த கட்டுமானமும் அமைந்த கோயிலாக இருந்து வந்தது. இன்று சுற்றுச்சுவர், பல்வேறு பரிவாரங்கள் சூழ இக்கோயில் காட்சியளிக்கின்றது.

இக்கோயிலைப் பல்வேறு காலங்களில் மராமத்து செய்திருக்கிறார்கள் என்பதைத் தற்போது காட்டும் கட்டுமானம் வெளிப்படுத்தும். இக்கோயிலில் வழிபாடு செய்வதற்காகத் தற்பொழுது பூசாரி ஒருவரை (பொன்னுச்சாமி) நியமித்துள்ளார்கள்.

ஐயன் - வையக்கிழவன்

இந்தக் கோயிலை ஐயன் கோயில் என்றும் வையக்கிழவன் கோயில் என்றும் வழங்கி வருகின்றார்கள்.

வையக்கிழவன் கோயில் வழிபாட்டு முறைகள்

இந்தக் கோயிலை வழிபடுவோர் முடி காணிக்கை செலுத்தியும், பொங்கல் வைத்தும், ஆடு, கோழிகள் பலியிட்டும், மாட்டைக் கொடையாக வழங்கியும் வழிபட்டு வருகின்றனர். தற்போது காதுகுத்து போன்ற நிகழ்வுகளும் இங்கு நிகழ்ந்து வருகின்றன.

விழாக்கள்

இந்தக் கோயிலுக்கு எடுக்கப்படும் விழாக்கள் குதிரை எடுப்பு, புதன் - சனி வழிபாடு, குடமுழுக்கு, படையல் என அமைகின்றன.

குதிரை எடுப்பு

இவ்வழிபாட்டுமுறை இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை நிகழ்ந்தது. அது தற்போது நடைபெறுவது இல்லை. அதற்குப் பதிலாகத் தற்போது இரண்டு குதிரைகளின் சிலைகள் கோயிலுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளன.

குதிரை எடுப்பு ஒரு வழிபாடாக இருந்து வந்த காலத்தில் அருகாமையில் உள்ள ஊரிலிருந்து குதிரையைச் சுமந்துகொண்டு வந்து இக்கோயிலில் வைத்து வழிபடுவார்கள்.



(படம் - 16, ஐயனார் கோவிலில் இடம்பெற்றுள்ள குதிரையின் பெருஞ்சிலை)



(படம் - 17, ஐயனார் கோவிலின் முன்பு இடம்பெற்றுள்ள கருப்பணசாமி சிலை)

புதன் - சனி வழிபாடு

இந்தக் கோயிலில் வழிபாடு செய்யவேண்டும் என்றால் புதன்கிழமையும் சனிக்கிழமையும் வழிபாடு செய்யலாம். பிற நாட்களில் வழிபாடு என்பது கிடையாது. பிற நாட்களில் கோயில் பூட்டப்பட்டிருக்கும்.

அந்த இரு நாட்களில் செய்யப்படும் வழிபாட்டில்தான் ஆடு, கோழிகள் பலி இடுதலும் மாட்டைக் கொடையாக வழங்குதலும் நிகழும். மாட்டைக் கொடையாக வழங்கும்பொழுது அம்மாட்டின் மேற்புறத்தோலில் சூலம் குறியீடும் வை.கி. என்ற குறியீடும் சூடேற்றப்பட்ட கம்பியால் பொறிப்பர். அதன் பின்பு அம்மாடு கோயில் மாடு என்றழைக்கப்படும்.

படையல்

ஆண்டிற்கு ஒருநாள் ஊரில் வரிவசூல் செய்து தேங்காய், கடலை, பொரி படையல் அந்த ஊருணியின் கிழக்குப் பக்கத்தில் நிகழும். இதில் 108 தேங்காய் என எண்ணிக்கையில் உடைத்து அந்தத் தேங்காய் நீரை வழிபாடு முடிந்ததும் அங்கு வந்த அனைவரின் தலையில் தெளித்து வழிபடப்படும் முறை நிகழும். இந்த வழிபாட்டு முறைக்குத் திருக்களை கட்டுதல் ஆகும். சித்திரை பிறந்ததும் இவ்வழிபாடு நிகழும். இது ஒவ்வொரு தெய்வங்களையும் வழிபடுவதற்குரிய முன்னோட்டம் என்கின்றார்கள் (தகவலாளர்-த.வசந்தா).

இவ்வழிபாட்டின்போது ஆவாரம் தழையைப் பூவுடன் பிடுங்கி வந்து கோயிலின் முன்புறம் தூய்மை செய்வர். அதுவும் மூன்று முறை கோயில் வாயிலிருந்து கீழ்நோக்கி

ஊருணியின் பள்ளம் வரை அந்தத் தழையைக் கொண்டு வளைந்து வளைந்து மூன்று முறை தூய்மை செய்வார்கள். இந்த நிகழ்வில் பெரும்பாலும் சிறு பிள்ளைகள் இடம்பெறுவதுண்டு. அதனை வழிநடத்துபவர் மூத்த குடிமக்களுள் ஒருவர். பின்பு அந்தக் கோயிலின் தென்கிழக்குப் பகுதியில் இருக்கும் வயலின் நடுவில் அமைந்திருக்கக்கூடிய புளியமரத்தின் அடியிலோ அல்லது வேப்ப மரத்தின் அடியிலோ எல்லோரும் அமர்ந்து அந்தப் படையலில் உள்ள தேங்காய், பொரி, கடலையைப் பெரியவர்கள் பங்கிட்டுத் தர, சிறியவர்கள் கிண்ணங்களிலும் தங்களுடைய கைகளிலும் துண்டுகளிலும் ஏந்தி வாங்கி அதை உண்டு தங்களுடைய இல்லங்களுக்கும் கொண்டு செல்வதைப் பார்க்கலாம்.



(படம் - 18, ஆவாரம் பூ, தழையுடன்)

குடமுழுக்கு

இந்தக் கோயிலில் இருக்கும் விமானத்திற்குப் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா நிகழ்த்தப்படும். இந்த விழாதான் அந்த ஊரில் பெருவிழாவாக இருக்கும். இவ்விழாவின்போது புராண நாடகங்கள் நிகழ்த்தப்பெறும். ஆடல் - பாடல் வந்ததும் அதுவும் மறைந்து போனது.

விமானச் சிற்பங்கள்

இந்தக் கோயிலின் விமானத்தில் பல்வேறு சிற்பங்கள் அமைந்துள்ளன. கோயிலின் பின்புற விமானச் சிற்பங்களில் ஒன்றாகப் பாலியல் சார்ந்த சிற்பம் அமைந்திருப்பதைப் பார்க்கலாம். இதுபோன்ற சிற்பமுறை பெருந்தெய்வ வழிபாட்டுத் தலங்கள் உள்ள கோபுரங்களிலும் விமானங்களிலும் காண முடியும்.

வழிபாட்டுக்குரியோர்

இந்தக் கோயிலின் வழிபாட்டுக்கு உரியோர் பல்லூரினர். உரப்புலி, சடையன்வலசை போன்ற ஊரினர்களின் குலதெய்வமாக இத்தெய்வம் அமைகின்றது (தகவல் : பூசாரி - பொன்னுச்சாமி).

பிற வழிபாட்டுத் தலங்களும் வழிபாட்டு முறைகளும்

மாரியம்மன் வழிபாடு

வையக்கிழவன் கோயில் வழிபாட்டுத் தலத்தைத் தவிர்த்து மாரியம்மன் வழிபாட்டுத்தலம் மிக விமரிசையான தலமாக அமைந்துள்ளது. இந்தத் தலம் தற்பொழுது ஊருக்குள் உருவாக்கம் பெற்றுள்ளது.





(படம் - 19, 20 கருவேலங் காட்டிற்குள் இருக்கும் அம்மன் கோயில்)

இந்தத் தலம் தானாக முளைத்தது என்றும் கூறுவர் (க.பழனிச்சாமி, த.வசந்தா; நாள்-31.7.2022, அலைபேசி வழியிலான உரையாடல்). மேலும் கூறும்பொழுது பழைய வீட்டுப் பகுதிக்குப் பாலும் மோரும் இடையர்கள் காஞ்சிரங்குடியிலிருந்து கொண்டு வருவர். இவ்வூரில் விற்றது போக, மீதி உள்ள பாலையோ மோரையோ மீண்டும் கொண்டு போகும்பொழுது தற்போதைய ஊரின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு குறிப்பிட்ட மேட்டுப்பகுதியில் மட்டும் ஒவ்வொரு நாளும் தடுக்கிக் கொட்டி விடுவது உண்டு. இவ்வாறு ஒவ்வொரு நாளும் பாலும் மோரும் கொட்டி வீணாகி விடுகின்றதே எனக் கருதிய விற்பன்னர் (இடையர்), அரிவாளையோ, மண்வெட்டியையோ கொண்டு வந்து அந்த மேட்டில் முளைத்த கல்லை வெட்ட இரத்தம் பீறிட்டு வருவதைப் பார்த்து அதிர்ந்துள்ளனர். பின்னர் இது தெய்வமாக இருக்கும் எனக் கருதி அவ்விடத்திலேயே ஒவ்வொரு நாளும் மீதியாகக் கொண்டுவரும் பாலையோ மோரையோ ஊற்றிச் செல்வதுண்டாம். அவ்விடத்திலே பின்னர் வழிபாடு நடத்த ஆரம்பித்து விட்டனர்.



(படம் - 21, ஊருக்குள் கட்டப்பட்டுள்ள அம்மன் கோயில்)

இவ்வழிபாட்டுத் தலத்தில் மழைவேண்டி வழிபாடு நடத்தப்பெறும். அந்த விழா தைப்பொங்கல் என்றழைக்கப்படுகிறது. இந்நிகழ்வு ஆண்டுக்கு ஒருமுறை நிகழும். இந்நிகழ்வில் ஊர் சாட்டி ஒரு வாரம் விரதம் இருந்து நாள்தோறும் இரவில் குலவையிட்டு, கும்மியடித்து வழிபடுவர். இறுதி நாளில் விழா எடுப்பர். இவ்விழா இரவுநேரம் முழுமையும் நிகழும். அந்த இரவில் ஊர் கூடி ஓரிடத்தில் பொங்கலிடுவர். அவ்விரவில் கும்மியடித்தல், சாமியாடுதல், ஆடு, சேவல்கள் பலியிடுதல், கரகம் எடுத்தல், மாவிலக்கு எடுத்தல் என வெகுவிமரிசையாக நிகழும். சாமியாடிகளிடம் மழை வருமா என்பது போன்ற பல கேள்விகள் கேட்கப்படும். அது ஒரு நம்பிக்கை சார்ந்தது. காலையில் கரகத்தை எடுத்துக் கொண்டு கண்மாய்க்குச் சென்று, அங்கு நீர் இருக்கும் சூழலில் நீருக்குள் கரகம் மூழ்கடிக்கப்பட்டும், நீரின்றி இருக்கும்பொழுது குழிதோண்டி அதற்குள் நீரிட்டுக் கரகத்தை அமிழ்த்துவர். அந்தக் குடத்தில் உள்ள நீரை, வந்த பக்தர்கள் மீது தெளிப்பதோடு இந்த நிகழ்வானது நிறைவுறும். இவ்விழாவிற்கு மந்தைப் பொங்கல் என்று பெயர்.





































(படம் : 22-39, வழிபாடு தொடர்பான படங்கள்)

கருப்பணசாமி வழிபாடு

கருப்பணசாமி அல்லது கருப்புச்சாமி என்று அந்த தெய்வத்தை அழைப்பர். இந்தத் தெய்வம் அரிவாளுடன் மீசையை முறுக்கியவாறு தோற்றமளிக்கும். தற்பொழுது வடிக்கப்பட்ட சிலையில் இக்காட்சியைக் காணலாம். இந்தக் கருப்பணசாமி சிலை இரண்டு இடங்களில் வைத்து வழிபடப்படுகிறது. வையக்கிழவன் கோயிலின் வாயிலில் நுழையும் முன்பு தெற்கு நோக்கிப் பார்த்த வண்ணம் வடக்கில் அச்சிலை அமைக்கப்பட்டிருக்கும். வையக்கிழவனுக்கு என்ன படையல் செய்யப்படுகிறதோ அதற்கு இணையான படையல் கருப்பணசாமிக்கும் செய்யப்படும். கூடுதலாக ஆடு - கோழி பலியிடுதல் கருப்பணசாமி தெய்வத்துக்குச் சேரும்.

ஊரின் கிழக்குப் பகுதியில் கருப்பணசாமி கோயில் உள்ளது. இக்கோயில் நடுகல்லாக வைத்து வழிபட்டு வருகிறது. தற்போதுதான் ஒரு சிறு கட்டடம் எழுப்பி சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தெய்வத்திற்கு வழிபாடு செய்வதில் அவ்வூர் மக்களுள் உருமிக் கோடாங்கி வகையினர் மட்டுமே முன்னுரிமை உடையவர்.

இந்தக் கோயிலின் வழிபாட்டு முறைகளில் ஒன்று ஆண்டுக்கு ஒருமுறை சிவராத்திரி அன்று மாலை நேரத்தில் உப்பில்லாத மொச்சைப் பயறு அவித்து வழிபடுதலாகும். அதைச் செய்பவர் வாயில் துணியைக் கட்டிக்கொண்டு அந்த மொச்சைப் பயற்றை அவித்துப் படையலிடுவார். அது முடியும் வரைக்கும் அவர் பேச மாட்டார். கருப்பணசாமியைச் சுற்றிச் சிறுசிறு மண்குவியல் எழுப்புவர். அந்தப் படையலுக்கான பொருள்கள் அங்கும் வைக்கப்படும். இப்படியாக இந்த வழிபாட்டுமுறை அமையும்.

உசிலை முனியும் இத்தி முனியும்

இத்தி முனியும் உசிலை முனியும் மந்தைப் பொங்கலன்றுதான் கவனத்திற்கு வருவார்கள். இத்தெய்வத்தை வழிபடுவோர்கள் மந்தைப் பொங்கலன்று மாலையில் பொங்கலிட்டும் சேவல் பலியிட்டும் வழிபடுவர்.

மாரியம்மன் கோயில் வழிபாடு மந்தைப் பொங்கல் என்றாலும் கருப்பணசாமி உசிலை முனி, இத்தி முனி ஆகிய தெய்வங்களை அழைப்பது ஒரு மரபாக இருந்து வருகிறது.

முடிவுரை

பள்ளமோர்க்குளக் கோயில்களும் வழிபாட்டு முறைகளும் எனும் தலைப்பில் அமைந்த இந்த ஆய்வுரையானது முற்றிலும் கள ஆய்வுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த ஆய்வுரையில், பள்ளமோர்க்குளம் ஊரின் வரலாறு குறித்தும், அவ்வூர் மக்களின் வழிபடு தெய்வங்களாக வையக்கிழவன், மாரியம்மன், கருப்பணசாமி, இத்தி முனி, உசிலை முனி, குத்துக்கல் முனி ஆகிய தெய்வங்கள் இருந்தமை குறித்தும், அத்தெய்வங்களை வழிபட்ட முறைகள் குறித்தும், நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் வழக்கமான நடைமுறையிலிருந்து மாறுபட்டு, சைவ உணவுகளே படையலாக்கப்பெறும் வையக்கிழவன் கோயில் வழிபாடு குறித்தும் விளக்க முறையில் தரவுகள் முன்வைக்கப் பெற்றுள்ளன.

பின்னிணைப்பு

கோயில் வழிபாடு



பழைய கோப்புப் படம்: இத்தி மரம் - இத்தி முனி



தற்போதைய படம் : இத்தி முனிக் கோயில்








மகாத்மா காந்தி
தேசிய ஊரக வேலை
உறுதி திட்டம் 2019-20
இராமநாதபுரம் மாவட்டம்
திருப்புல்லாணி ஒன்றியம்
திருவாடானை





சின்ன ஓடை அணைக்கட்டு



கண்மாய்







பானை ஓடுகள்

தகவலாளர்கள்

சோனைமுத்து, 60 வயது

க.பஞ்சவர்ணம், 75 வயது

க.தங்கச்சாமி, 63 வயது

க.இராமையா, 50 வயது

க.பழனிச்சாமி, 55 வயது

த.வசந்தா, 60 வயது

க.வையமுத்து, 80 வயது

ச.குமார், 25 வயது

கருப்பையா (வெங்கடேஷ் அப்பா), 80 வயது

பொன்னுச்சாமி, பூசாரி, 60 வயது

துணைநின்றவை

நாகசாமி இரா. & சந்திரமூர்த்தி மா., (2014), தமிழகக் கோயிற் கலைகள், சென்னை : தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு.

லூர்து தே., (2008), நாட்டார் வழக்காற்றியல் அடிப்படையில் : சில அடிப்படைகள், பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

https://www.muhavaimurasu.in/2015/08/blog-post_13.html?m=1

https://www.muhavaimurasu.in/2015_08_13_archive.html

http://www.tamilvu.org/courses/diploma/d061/d0611/html/d061121.htm

https://m.dinamalar.com/temple_detail.php?id=46946